# Apollo Hospitals Enterprise Limited

CIN: L85110TN1979PLC008035
Regd. Office : No. 19 Bishop Gardens, Raja Annamalaipuram, Chennai – 600 028
Secretarial Dept : Ali Towers, III Floor, No. 55 Greams Road, Chennai – 600 006
Tel. No. 044-28290956, 28293896, Email : investor.relations@apollohospitals.com
Website : www.apollohospitals.com

## Notice For Proposed Transfer of Shares to Investor Education & Protection Fund (IEPF)

The Company, as per the extant regulations, is required to transfer the unclaimed or unpaid dividends for a period of seven years relating to the year 2011 – 2012 to the IEPF Authority on 5th September 2019. Pursuant to Section 124 of the Companies Act, 2013 read with Rule 6 of the IEPF (Accounting, Audit, Transfer and Refund) Rules 2016, Notice is hereby given that all the related equity shares in respect of which dividend has not been paid or claimed for seven consecutive years or more (i.e, dividend from the financial year 2011-2012 onwards up to the financial year 2017-2018) shall be transferred by the Company in the name of the IEPF Authority.

As required under the provisions of the said Rules, the Company has sent a reminder on 28th June 2019 to the individual shareholders concerned to the latest available addresses, giving therein the particulars of the shares required to be transferred to the IEPF Authority and advising them to claim the dividend available with the Company on or before 20th August 2019 to avoid the aforesaid transfer of the dividends and shares. Shareholders who have not still claimed the dividend are requested to contact, either of the following :

| THE COMPANY | REGISTRAR AND SHARE TRANSFER AGENT |
| --- | --- |
| **APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED,**<br>Secretarial Dept : Ali Towers,<br>III Floor, No. 55 Greams Road,<br>Chennai – 600 006.<br>Tel. No. 044-28290956, 28293896.<br>E-mail : investor.relations@apollohospitals.com | **M/s. INTEGRATED REGISTRY MANAGEMENT SERVICE PRIVATE LIMITED**<br>Kences Towers, 2nd Floor, No.1,<br>Ramakrishna Street, North Usman Road,<br>T.Nagar, Chennai – 600 017.<br>Tel No. 044-2814 0801, 2814 0803.<br>E-mail : srirams@integratedindia.in |

The details of such shareholders have been uploaded on the website of the Company **www.apollohospitals.com.** It may be noted that requests received after the aforesaid date will not be entertained and the Company will proceed to complete the transfer of the dividend and shares as per the procedure laid down in the Act / Rules.

It may be noted that as per the extant regulations, the investors are permitted to claim the dividends and shares transferred to the IEPF Authority by making a claim in the prescribed form.

For further details, please visit the website: **www.iepf.gov.in**

Place : Chennai
Date : 03rd July 2019

for **APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED**
**S.M. KRISHNAN**
Company Secretary



# தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படைக்கு ரூ.7 கோடியில் 137 நவீன உபகரணங்கள்: முதல்வர் எடப்பாடி பழனிசாமி வழங்கினார்

சென்னை, ஜூலை 4–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படையின் பயன்பாட்டிற்காக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 137 பேரிடர் மேலாண்மை, தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களை வழங்கினார். அதன் அடையாளமாக காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) மகேஷ் குமார் அகர்வாலுக்கு ரோட்டரி (சர்குலர்) டயமண்ட் டிப் பிளேடுடன் கூடிய ரம்பம் என்ற கட்ட இடர்பாடு மீட்பு உபகரணத்தை வழங்கி துவக்கி வைத்தார்.

பேரிடர்களின் போது ஏற்படுகின்ற இன்னல்களை குறைக்கும் விதமாகவும், பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மிக துரிதமாக மீட்பு உதவிகளை உடனுக்குடன் கால விரயமின்றி அனுப்பிடவும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளையும், மக்களையும் எளிதில் சென்றடைவதற்கும், உள்ளூர் நிலப் பகுதி பற்றி நன்கு அறிந்திருக்கும் ஒரு



தனி அமைப்பு தேவைப்படுகிறது. எனவே, தேசிய பேரிடர் மீட்புப் படை வழியில் ஏற்கனவே உள்ள மாநில பேரிடர் மீட்புப் படையினை பலப்படுத்திடவும் மற்றும் பெரும் பேரிடர்களின் போது அனைத்து விதமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், காவல் துறையில் தனியாக ஒரு பட்டாலியன் "தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை" என்ற ஒரு புதிய பெயரில் உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி 11.7.2017 அன்று சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

இந்த பட்டாலியனின் செயல்பாட்டை மேம்படுத்த தகவல் தொடர்பு மற்றும் மீட்பு உபகரணங்கள் வாங்குவதற்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

அதன்படி, சென்னை, பூந்தமல்லியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 13–ம் அணி தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படையாக மாற்றம் செய்யப்பட்டது. இப்பேரிடர் மீட்புப் படைக்கு தேவையான நவீன உபகரணங்கள், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கும், பேரிடர் மேலாண்மை பயிற்சிகளை அளிப்பதற்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

அந்த அரசாணைக்கிணங்க, தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படையின் பயன்பாட்டிற்காக, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று 7 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பேரிடர் மேலாண்மை, தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களான இன்பிளாட்டபுள் பைபர் போட், புல்லட் கார்பைடு டிப்பிடு செயின் சா, டைமண்டு செயின் சா, கான்கிரீட் ஹமர் டிரில், சுவாசக் கருவி மற்றும் சிலிண்டர், மல்டி பங்சன் டவர் லைட் ஜெனரேட்டர், உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் ஜாக்கெட்டுகள், ஏர் லிப்டிங் பேக், கேஸ் கட்டர் உள்ளிட்ட 137 உபகரணங்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் க. சண்முகம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் நிரஞ்சன் மார்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் கொ. சத்யகோபால், காவல்துறை தலைமை இயக்குநர் திரிபாதி, பேரிடர் மேலாண்மை இயக்குநர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தீவிரவாதிகளின் பதுங்கு குழிகளில் ஈராக் ராணுவம் தொடர் தாக்குதல்

ரியாத், ஜூலை 4–

சிரியா, ஜோர்டான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய அண்டை நாடுகளுடன் எல்லை பகுதியை கொண்டிருக்கும் ஈராக்கின் அன்பர் பாலைவன பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தீவிரமுடன் செயல்பட்டு வருகின்றனர்.

அவர்கள் பொதுமக்களை கடத்தி செல்வது அல்லது கொலை செய்வது தொடர்ந்து வருகிறன்றனர். அவர்களை கட்டுக்குள் கொண்டு வர ஈராக் பாதுகாப்பு படை மற்றும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இந்நிலையில் அங்குள்ள ஆகாஷத் பகுதியில் பதுங்கு குழி மீது நடந்த வான்வழி தாக்குதலில் 4 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சிரியாவின் எல்லையையொட்டிய கிழக்கு பகுதியில் நடந்த வான்வழி தாக்குதலில் 4 ஐ.எஸ். தீவிரவாதிகளும், மொசூல் நகரின் மேற்கே ஈராக் படையினரின் தாக்குதலில் 2 ஐ.எஸ். தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். அவர்களின் வாகனங்களும் சேதமடைந்தன.

சுரங்க பகுதியின் மீது நடந்த மற்றொரு வான்வழி தாக்குதலில் உள்ளே பதுங்கியிருந்த 5 ஐ.எஸ். தீவிரவாதிகள் பலியாகினர். சிரிய எல்லையை ஒட்டிய பாலைவன பகுதியில் அமெரிக்க கூட்டணி படையின் வான்வழி தாக்குதலில் 3 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டு உள்ளனர்.

கடந்த 2017ம் ஆண்டு இறுதியில் நாடு முழுவதும் ஈராக் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தீவிர வேட்டையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் முழுவதும் தோற்கடிக்கப்பட்டனர். எனினும் அவர்களில் மீதமுள்ளவர்கள் புறநகர் பகுதிகள் அல்லது பாலைவன பகுதிகள் மற்றும் கரடுமுரடான பகுதிகளில் தஞ்சமடைந்து கொண்டு பாதுகாப்பு படையினர் மீதும் மற்றும் பொதுமக்கள் மீதும் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கஜா புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தர நடவடிக்கை

## சட்டசபையில் துணைமுதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தகவல்

சென்னை, ஜூலை 4–

கஜா புயலால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா மாவட்ட மக்களுக்கு தனி வீடுகள், அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக, சட்டசபையில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சட்டசபையில் இன்று தி.மு.க. உறுப்பினர் மதிவாணன் அவையின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து பேசினார்.

கஜா புயல் காரணமாக காவிரி டெல்டா மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்பட்டு, அங்கு வாழும் மக்கள் உடைமைகள், விடுகளை இழந்து, அவர்கள் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. விடுகளை இழந்த மக்களுக்கு விடுகள் கட்டித் தரப்படும் என அரசு உத்தரவாதம் அளித்தது.

விடுகளின் அளவை 400 சதுரடியாக அதிகரித்து கட்டித் தர வேண்டும். கூடிய விரைவில் பருவமழை பெய்ய இருக்கிறது. இதனால் அந்த மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். எனவே அவர்களுக்கு விரைவாக விடுகளை கட்டித் தர வேண்டும்.

தென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். குடிசை விடுகளை இழந்த மக்கள் குழந்தைக்கு பால் கொடுக்க கூட இடம் இல்லாமல் தவித்து வருகிறார்கள். கஜா புயல் தாக்கி 6 மாதம் ஆகிறது. எனவே விடுகள் கட்டித்தர வேண்டும் என்று அவையின் கவனத்தை ஈர்த்தார்.

அதற்கு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அளித்த பதில் வருமாறு:–

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பூங்கா நகரில் பழுதடைந்துள்ள 114 அரசு ஊழியர்கள் வாடகைக் குடியிருப்புகளை இடிக்கும் பணி முழுமையாக முடிவடைந்து விட்டது. அது ஒரு வாரியம் நிலம் என்றாலும், தற்போது அரசு ஊழியர்களுக்குத் தேவையான குடியிருப்புகள் அங்கு கையிருப்பில் இருப்பதாலும் புதிய அரசு ஊழியர்களுக்கான வாடகை குடியிருப்புகளை கட்டுவதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது புதுக்கோட்டை நகரில் அரசு ஊழியர்களுக்கென சத்தியமூர்த்தி சாலையில் குடியிருப்பதற்கு தகுதியான நிலையில் 136 அரசு அலுவலர்களுக்கான வாடகை குடியிருப்புகளும், ஆலங்குளத்தில் 294 வாடகை குடியிருப்புகளும் உள்ளன. உறுப்பினர் சொன்னது போல், சத்தியமூர்த்தி சாலையில் 31 குடியிருப்புகளும், ஆலங்குளத்தில் 93 குடியிருப்புகளும் அரசு ஊழியர்களுக்காகவே கட்டப்பட்டு, விடுகள் காலியாக இருக்கின்றன.

### பூட்டப்பட்ட வீடுகள்

அரசு ஊழியர்கள் யாரும் அந்த விடுகளை கேட்காத நிலையில், பாதுகாப்பு கருதி தான் அந்த விடுகள் பூட்டப்பட்டு இருக்கின்றன. அந்த விடுகள் நல்ல நிலையில் இருக்கின்றன. வேறு காரணங்கள் இல்லை. ஏற்கனவே, பல குடியிருப்புகள் காலியாக உள்ள நிலையில், பூங்கா நகரில் அரசு ஊழியர்களுக்கென புதிய குடியிருப்புகளை உடனடியாக கட்ட வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சொல்லுகின்ற பதிலை உறுப்பினரும் மற்ற உறுப்பினர்களும் சரியாக கவனித்துக்கொள்ள வேண்டும். மொத்தத்தில் புதுக்கோட்டையில் அரசு ஊழியர்களுக்கென நீங்கள் சொல்லுகின்ற சத்தியமூர்த்தி சாலையில் 136 விடுகள் கட்டி முடிக்கப்பட்டு நல்ல நிலையில் இருக்கிறது.

ஏற்கெனவே 136 விடுகள் கட்டி முடிக்கப்பட்டு அதில் 31 காலியாக இருக்கிறது. பாக்கி எவ்வளவு? சத்தியமூர்த்தி சாலையில் உள்ள குடியிருப்பில் 105 விடுகளில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். சத்தியமூர்த்தி சாலையில் மொத்தம் 136 விடுகள் தான் கட்டப்பட்டது. அதில் 31 விடுகள் தான் காலியாக இருக்கின்றன. பாக்கி உள்ள விடுகளில் அரசு ஊழியர்கள் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். இறப்பும், பிறப்பும் இயற்கை. ஏதோ ஒரு பெண் இறந்துவிட்டார் என்பதற்காக அங்கு வந்து குடியிருக்க மாட்டேன் என்கிறார்கள் என்ற ஒரு தோற்றத்தை செயற்கையாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல 294 விடுகள் ஆலங்குளத்தில் கட்டி முடிக்கப்பட்டன. அதில் 93 விடுகள் காலியாக இருக்கின்றன. 201 விடுகளில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, நல்ல நிலையில் இல்லாமல் எப்படி அரசு ஊழியர்கள் குடியிருந்திருப்பார்கள்? அவர்ஏதோ ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார். கேட்கவேண்டும் என்பதற்காக, அதை நியாயப்படுத்துவதற்காக இதைசொல்லிக்கொண்டிருக்கிறார். தயவுசெய்து உறுப்பினர்கள் கேள்வியைக் கேட்டால் அதற்குரிய பதில் எங்களிடமிருந்து வந்தால் அமைதியாக உட்கார்ந்து விட வேண்டும். தேவையில்லாத வகையில் இந்த சபையில் பேசக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணைமுதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.


### ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

IDFC FIRST Bank

(முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்) CIN : L65110TN2014PLC097792

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)



## Apollo Hospitals Enterprise Limited

CIN. L85110TN1979PLC008035

Regd. Office : No. 19 Bishop Gardens, Raja Annamalaipuram, Chennai – 600 028

Secretarial Dept : Ali Towers, III Floor, No. 55 Greams Road, Chennai – 600 006

Tel. No. 044-28290956, 28293896, Email : investor.relations@apollohospitals.com

Website : www.apollohospitals.com

Apollo HOSPITALS

### Notice For Proposed Transfer of Shares to Investor Education & Protection Fund (IEPF)

The Company, as per the extant regulations, is required to transfer the unclaimed or unpaid dividends for a period of seven years relating to the year 2011 – 2012 to the IEPF Authority on 5th September 2019. Pursuant to Section 124 of the Companies Act, 2013 read with Rule 6 of the IEPF (Accounting, Audit, Transfer and Refund) Rules 2016, Notice is hereby given that all the related equity shares in respect of which dividend has not been paid or claimed for seven consecutive years or more (i.e, dividend from the financial year 2011-2012 onwards up to the financial year 2017-2018) shall be transferred by the Company in the name of the IEPF Authority.

As required under the provisions of the said Rules, the Company has sent a reminder on 28th June 2019 to the individual shareholders concerned to the latest available addresses, giving therein the particulars of the shares required to be transferred to the IEPF Authority and advising them to claim the dividend available with the Company on or before 20th August 2019 to avoid the aforesaid transfer of the dividends and shares. Shareholders who have not still claimed the dividend are requested to contact, either of the following :

| THE COMPANY | REGISTRAR AND SHARE TRANSFER AGENT |
|---|---|
| APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED,<br>Secretarial Dept : Ali Towers,<br>III Floor, No. 55 Greams Road,<br>Chennai – 600 006.<br>Tel. No. 044-28290956, 28293896.<br>E-mail : investor.relations@apollohospitals.com | M/s. INTEGRATED REGISTRY MANAGEMENT SERVICE PRIVATE LIMITED<br>Kences Towers, 2nd Floor, No.1,<br>Ramakrishna Street, North Usman Road,<br>T.Nagar, Chennai – 600 017.<br>Tel No. 044-2814 0801, 2814 0803.<br>E-mail : srirams@integratedindia.in |

The details of such shareholders have been uploaded on the website of the Company **www.apollohospitals.com**. It may be noted that requests received after the aforesaid date will not be entertained and the Company will proceed to complete the transfer of the dividend and shares as per the procedure laid down in the Act / Rules.

It may be noted that as per the extant regulations, the investors are permitted to claim the dividends and shares transferred to the IEPF Authority by making a claim in the prescribed form.

For further details, please visit the website: **www.iepf.gov.in**

Place : Chennai
Date : 03rd July 2019

for APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED
S.M. KRISHNAN
Company Secretary



### டால்மியா ரீப்ராக்டரீஸ் லிமிடெட்

CIN: L24297TN1973PLC006372

பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், பி.ஓ. கள்ளக்குடி–621 651, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு.

Tel:- 911123457100. Website : www.dalmiarefractories.com

#### பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

(முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு பங்குகளை மாற்றுதல்)

திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) விதிகள் 2016 ('விதிகள்')ன் படி, இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இடம்: புதுடெல்லி
தேதி: 03 ஜூலை, 2019

டால்மியா ரீப்ராக்டரீஸ் லிமிடெட்டுக்காக
கம்பெனி செயலாளர்
Membership No. A36766



### ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

CIN L26943TN1965PLC005297

Website: www.ramcoindltd.com

#### அறிவிப்பு

கம்பெனியின் இணையதளம் www.ramcoindltd.com மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com and www.nseindia.comலும் இந்த அறிவிப்பு உள்ளது.

இடம்: சென்னை
தேதி : 4.7.2019

கம்பெனி செயலாளர் மற்றும் சட்ட தலைவர்



### பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிமிடெட்

CIN:L15422TN1996PLC037200

பதிவு அலுவலகம்: 'எக்ஸிம் ஹவுஸ்', 13 ராஜீவ் காந்தி சாலை (OMR) பெருங்குடி, சென்னை 600 096

#### அறிவிப்பு

30 ஜூன் 2019 அன்றுடன் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையை பரிசீலிக்கும் பொருட்டும், நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுக்கூட்டம், 23 ஜூலை 2019 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற உள்ளது.

சென்னை
03-07-2019

பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிட்.க்காக
நா.இராமநாதன்
நிர்வாக இயக்குநர்



### PUBLIC NOTICE

My client Mr.A.Baskar, S/o.Arumuga Naicker is the sole and absolute owner of Flat No.4 in the Ground Floor measuring 475 sq.ft. and Flat No.10 in the 1st floor measuring 475 sq.ft. together with 1/7th undivided share of land in all that piece and parcel of land measuring an extent of 2551 Sq.ft. bearing very Old Door No.66/1, Old Door No.108/1, New Door No.34 Kothavalchavady Street, Saidapet, Chennai–600 015, comprised in T.S.No.82, as per Patta T.S.No.82/2, Block No.20 and land measuring an extent of 1711 Sq.ft. bearing very Old Door No.66, Old Door No.108, New Door No.34, Kothavalchavady Street, Saidapet, Chennai - 600 015, comprised in T.S.No.82, as per Patta T.S.No.82/1, Block No.20 of Saidapet Village, the same having been settled on him by his mother Mrs.Saroja Ammal under a Settlement Deed dated 18.02.2008 registered as Doc.No.338 of 2008 in the Office of the Sub Registrar, Joint II Saidapet. The original parent document pertaining to the property viz., Sale Deed dated 14.07.1980 registered as Doc.No.2305 of 1980 in the Office of the Sub Registrar, Joint II Saidapet, under which Mrs.Saroja Ammal had purchased a portion of the abovesaid land has been lost/misplaced. If any person, Bank or financial institution has any right, claim, or title over the said property and is therefore consequently holding the abovesaid document as security may within 10 days from the date of publication of this Notice contact the undersigned with sufficient documentary proof thereof, failing which it shall be deemed that there is no third party claim, charge or interest over the abovesaid property.

K.Sivasakthivel
Advocate
No.25/2, New Bethania Nagar, 4th Street, Valasaravakkam, Chennai-600 087. Mb: 98844 97352